உ

# V. M. பெரியசாமி முதலியாரும் G. M. வேலுபிள்ளையவர்களும் பாடிக்கொண்டு வருகிற பர்மா பார்ஸி ஷோக் இருடன் பாட்டு.

1 JUL 1923
MADRAS




ரிஜிஸ்டர் காபிரைட்.

1923 [இதன் விலை அணா 0 1 6]

V. M. பெரியசாமிமுதலியாரா லியற்றப்பட்டு
சென்னை - சூளை, ஸன் ஆப் இந்தியா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

உ

சரஸ்வதி துணை.

நவீன நளின நவரத்ன நாட்டிய ராஜசிங்கம்

புதுப்பேட்டை K K. தங்கவேலுபிள்ளையின்

பிரதமசிஷ்டர்களில் இருவராகிய

V-M-பெரியசாமியும், C-M-வேலுபிள்ளையும்

பாடிக்கொண்டு வருகிற

பர்மா பார்ஸி வேஷாக்

# திருடன் பாட்டு.

(தெற்கத்திகள்ளனடா) என்ற வர்னமெட்டு.

கெடியானகேடியடா என்குருவு கே. கே. தங்கவேலனடா
தங்கவேலுசிஷ்டனடா நான் தரணிபுகழ்திரனடா

பேறுபெற்றகள்ளனடா V. M. பெரியசாமிதாசனடா
பெரியசாமிபேர்விளங்க T. V. அண்ணாமலைமுன்னிருப்பார்

(தில்லாலங்கடி) என்ற வர்னமெட்டு.

சிங்கைநகரிலேசிறந்தமெக் கின்சுரோட்டுமூலையிலே
கெவர்னர்விட்டிரக்கத்திலே தேட்டைபோட்டுவரையிலே
யென்னைதேடிவந்தசிப்பாய்மாரை யேத்தினேன்வொயிலே
சார்ஜண்டார்பார்த்திட்டார்கண்ணிலே போட்டுவிட்டுஓடிவிட்
[டேன் காட்டிலே

நானுபெரியதேட்டைக்காரன் நாடிவந்தேனே
யிவ்வூரைதேடிவந்தேனே பொருள்கள்சேகரிப்பேனே-என்னை
நாடிசினர்பிடிக்கவந்தால் நாக்கறுப்பேனே - கத்தியால்
மூக்கறுப்பேனே காதைசேர்த்தறுப்பேனே

சிலதுகாலம்சிங்கையிலிருந்து சென்றுவிட்டேன்கண்க்கா
சிரம்பான்யேறிவிட்டேன்கறுக்கா பயல்களைச் சேர்த்துகிட்டேன்
[பொறுக்கா

நானப்பவேசென்றுகோலாலம்பூர் கொட்டபொட்டேன்கணக்கா
டவுனில்பூட்டொடித்தேன்கறுக்காமையிதின்கண்டுவிட்டாராலுக்கா

போரபோக்கில்பிருந்திஷாப்பில் போட்டுகிட்டேன்ரெண்டு
போஸ்டாபீஸ்மணியார்டர்கண்டுசோல்ஜர்போட்டுவிட்டாங்குண்டு
போக்கிரிப்பயலைபொட்டெனலட்டியால் யேத்திவிட்டேன்ரெண்டு
மூக்கினில்ரத்தம்வரக்கண்டு வோடினேன்கள்ளுகடைகண்டு-அந்த

கல்லுக்குழிகறுப்பையா கள்ளுகடைகட்டாயமேபுகுந்து
காடிகள்ளையெடுத்துமேகுடித்துகஞ்சாகொஞ்சங்கசக்கியேயடித்து
வெகு - கபகபவென்றுபதனஞ் சாங்கட்டைவூறுக்குள்ளேபுகுந்து
கதவின்பூட்டுகளையுடைத்து வோட்டம்பிடித்தேனேயடுத்து

இன்னம்பினுக்குதயப்பன்யிப்போ யெல்லாவூறுஞ்சென்றேன்
இருபத்தாறுநெம்பர்பெற்றேன்யிணையில்லாசிங்கமென்றுவுற்றேன்
இருட்டுதேட்டைதங்கவேலிடத்தில் சிலப்பாட்டைகற்றேன்
ஜெகமெங்கும்பிரசித்திபெற்றேன் யெல்லாரிடம்சர்டிபிகேட்டு
[கொண்டேன்

ஜெயமோங்கும் ராயவேலூரில்வாழ்ந்திடும்
செல்வபெரியசாமி செந்தமிழ்க்கருள்புரிவாமி
சிறுவன்பணிந்தேன் வாசாமி
நான்செல்லுமிடங்களில் ஜெயம்பெற்றுவர துணையிருசாமி
மதுரைசிங்கவீராசாமி மதுரைசிங்க வீராசாமி

வசனம்.

பாருங்கோசாமி பாருங்கோ ஆண்டவனே கணக்கு கணக்கு தான் தினுசுதினுசுதான் சுக்காங்கிரைத் தண்டுதான் வேண்ட போகின்றேன் குருவைத்தான்.

கார்கொண்டசிங்கமாம் கருணுவதாரனும்
பேர்கொண்டசிங்கமாம் பெரியோர்வயிற்றில்பிறந்தசிங்கம்
சீர்கொண்டசிங்கமாம் சிங்கராஜசேகரநவமணியின்சீடனும்
என்குருவு அகிலவிநோத பரிபாலசங்கத்தில்மெடல்பெற்றராஜ
[சிங்கம்

அழியாத இருபத்தி ஆறுநெம்பர்பெற்றசிங்கம்
இந்தஜெகமெங்கும் புகழ்பெற்ற என்குருவு
கள்ள கே. கே தங்கவேலுபிள்ளையை ஆசிர்வதிக்கவேண்டும்
கனவானேபூமானே சீமானேதனவானே குணவான்களே,

குளே கள்ளபார்ட்

# C. M. வேலுபிள்ளை

## தன் குலதேவதைகளை வேண்டுதல்

வாருங்களேஜல்தி வாருங்களே
தேட்டைபோடப்போறேன் எனைகாருங்களே வாரு

வாகனனேமொண்டி வீரண்ணனேதீர
சங்கிலியண்ணனே காரண்ணனே வாரு

டாகினிமோகினி மலையாளதேவதையே
பூவாடைக்காரி புகழும்அங்காளம்மா வாரு

நத்தகன்னியிருசி நாச்சாயிபேச்சாயி
காட்டேரிசாமுண்டி சோலாபுரித்தாயே வாரு

(அழகுசுகுமாரி) என்ற வர்னமெட்டு.

நாகூருண்டவரேஅருளும்நபி நாயகமும்நீரே கண்பாரே
ஷாகூல்அமிதொலியாகுமேமீரு சாயபுயெனவேவோதுமேகுருன்

வேண்டினேனபியின் தாண்டவனேயிடர் •
மோண்டிடவேசெய்யும் தூண்டாமணிசுடர் நா

லோகமேபுகழ் யோகமேகுரு
வாகவிளங்குஞ்சற் போதமேதிரு நா

வாரந்தோறுங்குரு வாரத்தில்மிகவே
காருந்தருகாவில் சீர்புகழ்சொல்லவே நா

சங்கொலிக்கிடும்நாகை தங்கிவாழும்சொக்க
லிங்கம்சொல்லுந்தமிழ் பெங்கிலுமேபடிக்க நா

(கண்டியில்மேவும்) என்ற வர்னமெட்டு.

காந்சாலைதன்னில்வாழும் கனத்தமுனியாண்டியே
காக்ஷிதந்தருளநீவா அய்யனேநீயும்வா
அப்பனேநீயும்வா சாமியேநீயும்வா
நான்களவாடபோரேனிதோ காட்டிகொடுத்திடாமல்
காத்தாட்சிக்கயிப்போவா

தேங்குரோட்டினில்வாழும் தெய்வானை மணாளனே
தேடியெடுப்பேன்காவடி ஷோக்கானகாவடி
சிங்காரக்காவடி சந்தனக்காவடி
நான்களவாடபோயிட்டாலுங் காட்டிகொடுத்திடாமல்
காத்துரட்சிக்கநீயும் வா வா வா

சிருள்ளோர்புகழ்வேலூர் செல்வன்பெரியசாமி
சிலன்குறையைதீர்க்கவா அப்பனேஎன்முன்வா
அய்யனேயென்முன்வா சாமியேயென்முன்வா
நான்களவாடபோயிட்டாலும் காட்டிகொடுத்திடாமல்
காத்துரட்சிக்க நீயும் வா வா வா

தெம்மாங்கு.

சவுத்பிரிஜ்ரோட்டில்வாழும் எங்கள்சத்திமஹாமாயியே
சந்தில்தேட்டைபோடபோரேன் எங்கள் கொடிமலையாண்டவனே

கோட்டைமதில்யேறப்போறேன் எங்கள்கொடிமலையாண்டவனே
கொஞ்சமனமிறங்கிகூட யிருந்துகாக்கவேணும்

அச்சாரோட்டருகில்வாழும் எங்கள் ஆதிசிவமேவாரும்
அன்புடனேபொருள்கிடைத்தால் வேலு அபிஷேகம்செய்துவை
[ப்பேன்

வசனம்.

இப்படி நம்ம தேவதைகளெல்லாம் வேண்டிகிட்டோம் சும்மா அப்டி ஒருஜோக்குல யேறிபார்க்கலாம் பாருங்கோ சாமி ஒருகுட்டி கணக்குல்தான் யிருக்குரு.

(செக்கநல்ல சிவத்தகுட்டி) என்றமெட்டு.

பட்டுநண்ணு புடவைக்காரி பாப்பாரசேலைக்காரி
அடி சேலைக்காரி அடிசேலைக்காரி அடிசேலைக்காரி

பெண். கிட்டவந்துகூருதேமட்டி கிழவனைப்போல்வருதேகிட்டி
வருதேகிட்டி வருதேகிட்டி வருதேகிட்டி

ஆண். பக்ஷமுடன் என்னைச்சேர வா வா வா

பெண். பாவியேனை யிந்தவாது போ போ போ

ஆண். போவென்று சொன்னல்பாவம் பார் பார் பார்

பெண். பொல்லாங்காய் பேசவேண்டாம் வீண் வீண் வீண்
ஆண். யோகம்பொல்லாது என்னிடம் மோடிசெய்யாதே
பெண். மூடாவேண்டாம் முறண்டாதடா
ஆண். ஆசையான அழகுதிருடன் ஆரணங்கே
பெண். ஆகாதவார்த்தைவேண்டாம் போடாமூடனே
ஆண். ஆசைதீருமோ அன்புடன்சேருமோ
பெண். பேர்விளங்கும் பெரியசாமிதாசன்சொன்ன
தையலடா நான்தையலடா நான்தையலடா

வசனம்

பாத்துகோகுட்டி டாங்பண்ணுதே நம்பகிட்டயேறு ஒரு கணக்குலே.

(பூமிமெச்சிடும்) என்ற வர்னமெட்டு.

ஆண்

அடவிதனில்வந்து அகப்பட்ட அன்னமே ஆறடி
கண்ணே ஆறடி கண்ணே ஆறடி இந்த
ஆண்பிள்ளையைகூடி முத்தந்தந்தால் வெகுஜோரடிவெகுஜோரடி

பெண்.

அணையவாயென்றென்னை அதட்டிகேழ்க்கவந்ததாறடா
ருஜா ஆறடா ருஜா ஆறடா இந்த
ஆகாதவார்த்தையை அடுத்துறைத்தால் பாவம்பாறடா ருஜாபாறடா

ஆண்.

எங்கும்புகழ்பெற்ற எந்தன்குரு தங்கவேலடி
சிடன்வேலடி வுனக்குஜோடடி என்னை
இன்பமாய்கூடினல் இடரொன்றும்வாராது சேரடி என்னைச்சேரடி

பெண்.

இன்பமாய்கூடென்று யிகழ்ச்சியாய்பேசிடும் யீனனே
அடாயீனனே அடாயீனனே என்னை
யேனிந்தவாதுகள் ஏசிப்பேசுறாய் துஷ்டசீலனே துஷ்டசிலனே

வசனம்

அடேசண்டாளா யேன் என்னைவீணாய் பலாத்காரம் செய்கின்றனை வேண்டாம் சென்றுவிடு யிங்கிருந்தால் வீணாய்கெடுவாய்.

## சதாரம் காட்டில் கடவுளை தியானிப்பது

(ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே) என்ற வர்னமெட்டு

வாடினேன்வாடினேன் வாடினனே மனம்
நாடினேன்நாடினேன்நாடினேனே
வர்னமயில்வாகனனே வள்ளிமகிழ்வேலவனே
வாரும்பாரும் கடைக்கண்தானே வா

சென்னைசெட்டிவீதி சன்னதியில்வாழும்
செல்வன்கந்தசாமி யுந்தனையேநாளும்
சேயிழைபணிந்தேன் சிறட்புடனேகாரும்
ஜெகமதில்வேறு ரெனக்குதுணைகூறும் வா

அன்னைதந்தைகுரு தெய்வமும்நீரே
ஆதிபராபர மானவர்நீரே
சோதியாய்முன்னிற்கும் சொர்க்கமும்நீரே
சொக்கலிங்கரும மானவர்நீரே வா

என்னிலம்புகழும் அண்ணலேபோற்றி
ஏந்திழைதெய்வயா னைநாதாபோற்றி
அற்புதபெரிய சாமிப்பதம்போற்றி
அன்புள்ளசபைபோர்கள் அடிதினம்போற்றி வா

வசனம்

ஆ ஜெகதீசா நீர்தான் தனை காட்டில்வந்து யான் அனாதியாக அலறிநிற்கும் சமயத்தில் என்னை பலாத்காரமாக பெண்டுக்கு அழைக்குறான் நீர் தான் அவனை தண்டிக்கவேண்டும்.

(தொட்டால் மணக்குதடி) என்ற வர்னமெட்டு

ஆண் கண்டால் கண்கள் கூசுதடி கண்ணேபெண்ணே
பெண் கள்வாவீணாய் என்னிடத்தில்துள்ளவேண்டாம்
ஆண் கள்ளுகுடுப்பேன் பாரு
பெண் கஷ்டப்படுவாய் வோடு
ஆண் தஞ்சமென்றேண்டி யுன்னை
பெண் தாவிசெல்குவாய் சொன்னேன்
ஆண் மிஞ்சிப்பேசாதேவாடி வாடிச்சேரஜோடிபோட
பெண் கெஞ்சியுந்தன் நெஞ்சிமிஞ்சிபேசுவனே

ஆண் போடுதில்லாலேதாளம்
பெண் பொல்லாங்குநேரும்நேரும்
ஆண் சல்லாபக்காரியேனீ
பெண் சாதிக்காதேபோடாநீ

வசனம்

எகுட்டி நம்பகிட்ட கணக்பண்ணு டாப்புகிப்பு குல்லாகள ட்டி பதில்டாப்போட்டிடுவேன் தெரியுமா ஜாக்கிறதை பேறிவா நம்பமாமன் யாருண்ணதெரியாது 26-வது நெம்பர் பில்லகாரன் தெரியுமா.

(லாவணி) வர்னமெட்டு.

உலகத்திலொருமானே வுன்னைகண்டு வுருகிவாடுறேன்நானே
உல்லாசமாய் வார்த்தைசொல்லடிதேனே
என்னமோயிருப்போம் யிருவர்தானே

தங்கமாளிகைகளனேகமுண்டு கால்பிடிக்கதாதியிருவருண்டு
அதிவினோத பிருந்திஷாப்புகளுண்டு விலையுயர்ந்த
சோப்புமனேகமுண்டு மோகனமானேசொல்லடியிங்கு

பூசிக்கஅத்தர்பன்னீருமுண்டு பூலோகத்தில்கிடைக்காதசொத்து
அன்னமேவருவாயே ஆவலைதீர்ப்பாயே [முண்டு
அதிஷ்டகாரிநீயே உருளுவோம்நாம்வாயே

முதற்பாகம் முற்றிற்று.

---

இரண்டாம்பாகம் கூடிய சீக்கிரம் வெளியாகும்.

☞ இப்புத்தகம் விற்குமிடம் பால இந்திய நவீன நாடக சபா நெ-90 ஜுனை பட்டாளம் புளியந்தோப்பு ஐரோட், சென்னை.

---

எமது கம்பெனியின் பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அரையணு ஸ்டாம்பு அனுப்பி அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்—எஸ். பி. இராஜாராம் கம்பெனி,
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.